




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 362 | 24.06.2026 | WEDNESDAY | AANI : 10 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 362 | 24.06.2026 | புதன்கிழமை | ஆனி : 10 | விலை : ரூ.5/-


## செப்.15ல் தொடக்கம்

# "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்"

## ஆண்டுக்கு ரூ.755.83 கோடி ஒதுக்கீடு

சென்னை: ஜூன்.24-

அரசு மருத்துவ மனைகளில் பிறக்கும் குழந்தைகள் பயன்பெறும் 'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை' அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று தமிழகம் முதல்வர் விஜய் தொடங்கி வைப்பார் என்று அரசு தெரிவித்துள்ளது. இந்தத் திட்டத்துக்காக ஆண்டுதோறும் ரூ.755.83 கோடி நிதியை ஒதுக்கீடு செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழ்நாடு முதல்வரின் தலைமையில், வெற்றித் தமிழகம் தொலைநோக்கு திட்டங்களுக்கு (Vetri Thamizhagam vision document) தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் மிகவும் முக்கியமான திட்டம் "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்".



அரசு மருத்துவ மனைகளில் பிரசவிக்கும் ஒவ்வொரு குழந்தையையும், மற்றும் பிரசவித்த தாயையும் கவுரவிக்கும் முகமாக "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்" வடிவமைக்கப்பட்டு இன்று, இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தாய் சேய் நலனை மேம்படுத்துவதற்கு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி, இலவச பிரசவம் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தை பராமரிப்பு சேவைகள், அவசர மகப்பேறு சிகிச்சை, ஊட்டச்சத்து அளித்தல், பிரசவத்திற்காக மருத்துவமனையை திட்டமிடும் முறை மற்றும் கர்ப்பிணி மற்றும் குழந்தைகள் கூட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மென்பொருள் (PICME) உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு இம்முயற்சிகள் மாநிலத்தில் தாய் சேய் நலக் குறியீடுகளை குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தியுள்ளன.

அரசு மருத்துவ மனைகளில் பிரசவிக்கும், தமிழ்நாட்டில் நிரந்தரமாக வசிக்கும் குடும்பங்களை சார்ந்த தாய்மார்களின் குழந்தைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும்.

தமிழர் பாரம்பரியத்தில், "தாய்மாமன் சீர்" என்ற மரபின்படி, தமிழ்நாடு முதலமைச்சர், தாயின் சகோதரர் புதிதாகப் பிறந்த குழந்தையை வரவேற்று வாழ்த்தும் வகையில் தங்கம் உள்ளிட்ட பரிசுகளை வழங்கும் விதமாகவும், தமிழர் பண்பாட்டு மரபை பிரதிபலிக்கும் வகையிலும், அரசு ஒவ்வொரு குழந்தைக்கும் தாய்மாமனின் பங்கை ஏற்று, அன்பும் அக்கறையும் நிறைந்த வரவேற்பின் அடையாளமாக ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்பட உள்ளது.

தமிழ்நாடு அரசின் சுகாதாரச் சேவைகளில் மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும் நோக்கிலும், அரசு மருத்துவ மனைகளில் பிறக்கும் குழந்தையின் பிறப்பை நினைவுகூரும் வகையிலும், தாய்மையின் மகிழ்ச்சி மற்றும் முக்கியத்துவத்தை கொண்டாடும் வகையிலும் "தாய்மாமன் தங்க மோதிரத் திட்டம்" செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தை மாநிலத்தில் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் ரூ.755.83 கோடி நிதியை ஒதுக்கீடு செய்கிறது. இத்திட்டற்கான ஒப்பந்த புள்ளிகள் உடனடியாக கோருவதற்கு தமிழ்நாடு முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இத்திட்டத்தின் கீழ், 22 ஜூன் 2026 முதல் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகள் பயன்பெறுவார்கள். "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்" அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15, 2026 அன்று முதல்வர் விஜய் துவக்கி வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தில் விவசாயிகள் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும்"



புதுடெல்லி: ஜூன்.24-

இந்திய அமெரிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் வேளாண் பொருட்களை இணைக்கக் கூடாது என வலியுறுத்தி, டெல்லி ஜந்தர் மந்தரில் விவசாயிகள் தர்ணா போராட்டம் நடத்தினர். இதில் கலந்துகொண்ட பி.ஆர்.பாண்டியன், இந்த ஒப்பந்தத்தில் இந்திய விவசாயிகள் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்.

மத்திய அரசு, அமெரிக்காவோடு தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து ஜூன் 23, 24 ,25 ஆகிய தேதிகளில் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறது. 25ஆம் தேதி ஒப்பந்தம் இறுதியாக வாய்ப்பு உள்ளதாக சொல்லப்படுகிறது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்கான விவசாயிகள் இன்று டெல்லி ஜந்தர் மந்தரில் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு சமியுத்த கிசான் மோர்ச்சா தேசிய ஒருங்கிணைப்பாளர் ஜெக்கித்சிங் தல்லேவால் தலைமை தாங்கினார்.

இந்தப் போராட்டத்தில் தமிழக அனைத்து விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் ஒருங்கிணைப்பாளர் பி.ஆர்.பாண்டியன் கலந்துகொண்டு பேசியது: "ஏற்கெனவே ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதற்கு விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து இந்தியா முழுவதும் போராடி வருகின்றனர்.

விவசாயிகள் இந்தியாவில் உற்பத்தி செய்கிற பொருட்களை வரியின்றி தடையின்றி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து சந்தைப்படுத்தி கொள்வதற்கு வழிவகுக்கும். நாடாளுமன்றத்தில் வர்த்தக ஒப்பந்தம் குறித்து வெளிப்படையான விவாதத்திற்கு மத்திய அரசு அனுமதிக்க முன்வரவில்லை. இந்திய விவசாயிகளிடமும் கருத்து கேட்கவில்லை.

இந்நிலையில் தன் விருப்பத்திற்கு மத்திய அரசு, அமெரிக்காவோடு தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவில் வெளிநாடுகளிலிருந்து வேளாண் உற்பத்தி பொருட்களை தடையில்லாமல் இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு அனுமதி மறுக்க வேண்டும். விவசாயிகள் வாழ்வாதாரத்தை பாதுகாக்க முன்வர வேண்டும் என வலியுறுத்துகிறோம்" என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தில் பல்வேறு விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டின் சார்பில் இப்போராட்டத்தில் அபிமன்யூகொஹார், கிருஷ்ணகிரி பாலசிவபிரசாத் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## "முதல்வர் விஜய் 'கட்சி நிதி' என்றதும் திமுகவுக்கு பயம் ஏன்?" : அமைச்சர் நிர்மல் குமார்

சென்னை: ஜூன்.24-

"முதல்வர் விஜய் தனது உரையில் 'பார்ட்டி ஃபண்ட்' எனச் சொன்னவுடன் திமுகவுக்கு ஏன் பயம் என தெரியவில்லை. அவர்கள் வெளியேறிவிட்டனர்" என்று அமைச்சர் நிர்மல் குமார் கூறினார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "முதல்வர் உரை தொடங்கியுடன் அவர், 'பார்ட்டி ஃபண்ட்' என சொன்னவுடன், திமுகவுக்கு என்ன பயம் எனத் தெரியவில்லை. பேரவையில் இருந்து அவர்கள் வெளியேறி விட்டனர்.

எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி தனது அறையில் அமர்ந்து, முதல்வரின் உரையை கேட்டுவிட்டு, பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அவருக்கு என் நன்றி. ஒவ்வொருக்கும் ஒவ்வொரு பாணி உள்ளது. எனக்கு ஒரு பாணி, கருணாநிதிக்கு ஒரு பாணி என அனைவருக்கும் ஒவ்வொரு பாணி உள்ளது. அப்போதும், எம்ஜிஆரை இப்படித்தான் பேசினார்கள். அதே டெக்னிக்கை தான் இப்போதும் பின்பற்றுகிறார்கள். இதை அவர்கள் மாற்றப் போவதில்லை.

கடந்த ஆட்சியில் பணம் இல்லாமல், டிரான்ஸ்ஃபர் நடக்கவில்லை. ஆனால், இப்போது அப்படி இல்லை. திமுக ஆட்சியில் சாமானிய, ஏழை, எளிய மக்கள் சட்டப்பேரவைக்குள் வந்தது இல்லை; புரோக்கர்கள் மட்டுமே வந்தனர். ஆனால், இப்போது, ஒவ்வொரு அமைச்சரையும் சாதாரண ஏழை, எளிய மக்கள் சந்திக்கின்றனர். இதை அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஒவ்வொரு துறைக்கும் பி.ஏ.க்களை நியமித்து வசூல் செய்யும் வேலையைதான் அவர்கள் செய்தனர்.

எடப்பாடி பழனிசாமியையும் சந்திக்க நேரம் கேட்டோம். ஆனால் அவர்கள், தற்போது அதிமுகவில் உட்கட்சி பிரச்சினை உச்சத்தில் இருப்பதால், தற்போது சந்திப்பு நடந்தால் நன்றாக இருக்காது என சொல்லிவிட்டனர். எடப்பாடி பழனிசாமிக்கு நேரடியாக போன் கிடையாது. அவரை சுற்றியிருக்கும் மூன்று, நான்கு பேருக்குதான் தொடர்பு கொள்ள வேண்டும். அதனால் அவர்களை தொடர்பு கொண்டுதான் பேசினோம். இதனால், அதிமுகவின் அடுத்தகட்ட தலைவர்களை சந்திக்கலாம் என நினைத்தோம். அந்தச் சந்திப்பு மரியாதை நிமிர்த்தமாக தான் நடந்தது. அவர்களை வைத்து வாக்கேடுப்பில் நாங்கள் வெற்றிபெற்றோமா?

நான் முதல்வன் திட்டத்தை யாரும் முடக்கவில்லை. ஒவ்வொரு திட்டத்தின் பெயரும் அதன், செயல்பாடு சார்ந்து இருக்க வேண்டும். அந்தப் பெயரில் பல்வேறு குழப்பம் இருக்கிறது.

பார்ட்டி ஃபண்ட் உங்கள் கட்சியில் இல்லையா? 30 ஆயிரம் கோடி ரூபாய் குறித்து அக்கட்சியின் முன்னாள் அமைச்சர் பிடிஆரிடம் கேளுங்கள். இது பார்ட்டி ஃபண்டா இல்லையா எனக் கேளுங்கள். இது குறித்து விசாரணை நடத்தலாமா வேண்டாமா எனக் கேளுங்கள்.

சட்டம் ஒழுங்கு குறித்து தெளிவாக முதல்வர் சொல்லிவிட்டார். எங்கள் உறுப்பினர்கள் பேரவைக்குள் அமைதியாகவே இருந்தனர். அவர்கள்தான் கத்திக் கொண்டிருந்தனர். தற்போது பார்ட்டி ஃபண்ட் ஒழிக்கப்பட்டுவிட்டது" என்று அவர் தெரிவித்தார்.

## "மேகேதாட்டு விவகாரத்தில் புதிய நடுவர் மன்றம் பேராபத்து" : சீமான்

சென்னை: ஜூன்.24-

'மேகேதாட்டு அணையை எதிர்ப்பதாகக் கூறி, நடுவர் மன்றம் அமைக்க தவெக அரசு கோருவது நிலையை இன்னும் மோசமாக்கும் பேராபத்து' என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'காவிரியாற்றின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்ட முயலும் கர்நாடக அரசின் செயலை எதிர்ப்பதாகக் கூறி, நடுவர் மன்றம் அமைக்கக் கோரும் ஆளும் தவெக அரசின் போக்கு மிக மிகத் தவறான முடிவாகும். நடுவர் மன்றம் கோரும் திருத்தத்தை சட்டப்பேரவை தீர்மானத்தில் எதிர்க்கட்சியான திமுக சேர்க்கக் கோரியதும், அதனை உடனடியாக ஏற்றுக் கொண்டு, திருத்தித் தீர்மானத்தை இயற்றியிருக்கும் செயல்பாடு ஆளும் தவெக அரசுக்கும், எதிர்க்கட்சியான திமுகவுக்கும் காவிரி நதிநீர் உரிமையில் அக்கறையோ, அடிப்படைப்புரிதலோ இல்லை என்பதையே காட்டுகிறது.

இத்தோடு, கடந்த திமுகவின் ஆட்சியிலேயே நடுவர் மன்றம் கோரிக் கடிதம் எழுதப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினும், நடுவர் மன்றம் அமைக்க வலியுறுத்தி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக முதல்வர் விஜய்யும் கூறியிருப்பது கூடுதல் அதிர்ச்சி அளிக்கிறது.

மேகேதாட்டு அணை விவகாரத்தில் புதிதாக ஒரு நடுவர் மன்றத்தை நாடினால், அது தற்போதிருக்கும் நிலையை இன்னும் மோசமாக்கும் பேராபத்தாக முடியும் எனும் குறைந்தபட்சப் பார்வையும், தொலைநோக்குச் சிந்தனையும்கூட இல்லாது, முன்வைக்கப்படும் நடுவர் மன்றக் கோரிக்கையை மிகக் கடுமையாக எதிர்க்கிறேன்.

கீழ்ப்பாசன மாநிலங்களின் அனுமதியும், ஒப்புதலும் இல்லாது, மேல்பாசன மாநிலங்கள் அணை உள்ளிட்ட கட்டுப்பானப்பணிகள் மேற்கொள்ளக்கூடாது என்பது மாநிலங்களுக்கிடையேயான நதிநீர்ச் சிக்கலில் பின்பற்ற வேண்டிய விதி; சட்டம். இதனை உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளும், காவிரி மேலாண்மை ஆணையத்தின் வழிகாட்டல்களும் உறுதிசெய்கின்றன. கர்நாடகத்தைப் பொறுத்தவரை எல்லா விதிகளையும், சட்டங்களையும் காற்றில் பறக்கவிட்டுவிட்டு அடாவடித்தனம் செய்வதும், முழுக்கத் தான்தோன்றித்தனமாகச் செயல்படுவதுமானப் போக்குகளில்தான் தொடர்ந்து பல ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறது.

கபினி அணை, ஹேமாவதி அணை, ஹாரங்கி அணை உள்ளிட்டவை யாவும் விதிகளுக்கும், சட்டத்திற்கும் புறம்பாகவே கட்டப்பட்டது. விதிகளுக்கு மாறாகவே கர்நாடகத்தின் பாசனப்பரப்பும் விரிவுப்படுத்தப்பட்டது. அதன் நீட்சியாகவே, தற்போது மேகேதாட்டு அணை கட்டி, காவிரி நதிநீர் உரிமையை முழுமையாகத் தனதாக்கிக் கொள்ளத் துடிக்கிறது கர்நாடக அரசு. மொத்தத்தில், தமிழ்நாட்டை மாறி ஆண்ட ஆண்ட திராவிடக் கட்சிகளின் ஆட்சிக்காலத்தில் காவிரி உரிமை காவு கொடுக்கப்பட்டது என்றே கூறலாம்.

தமிழ்நாட்டு அரசின் அனுமதி இல்லாமல் மேகேதாட்டுவில் அணை கட்ட முயற்சிப்பது ஏற்கனவே இருக்கும் விதிகளின்படியே சட்ட விரோதம்தான் எனும்போது புதிய நடுவர் மன்றம் என்பது தேவையில்லாத ஒன்றாகும். ஒருவேளை, நடுவர் மன்றம் புதிதாக அமைக்கப்பட்டால் சிக்கலை மேலும் நீட்டிக்கவும், இன்னும் பல காலம் அதனை இழுத்துக்கொண்டே போகவும் வழிவகை செய்திடும். ஒருவேளை, அந்நடுவர் மன்றத்தின் தீர்ப்பு மேகேதாட்டு அணை கட்ட ஒப்புதல் வழங்குமானால் சட்டப்பூர்வமாக இருக்கும் கடைசி வாய்ப்பையும் தமிழ்நாடு இழக்க நேரிடும்.

முன்னாள் பிரதமர் வி.பி.சிங் ஆட்சியில், காவிரி நதிநீர் உரிமைகளுக்கென நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு, நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு, இறுதித்தீர்ப்பு, தீர்ப்பு அரசிதழில் வெளியிடு, காவிரி மேலாண்மை வாரியம், காவிரி ஒழுங்காற்றுக்குழு ஆணையம் எனப் பலகட்டப் படிநிலைகளைக் கடந்து வந்திருக்கிறோம். தற்போதைய நிலவரப்படி, 177.25 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழ்நாட்டுக்கு கர்நாடக அரசு தர வேண்டும். அதனைத் தர மறுத்து சண்டித்தனம் செய்து வரும் கர்நாடக அரசு மழை, வெள்ளக் காலங்களில் பெய்யும் மழைநீரை வெளியேற்றும் வடிகாலாக மட்டுமே தமிழ்நாட்டை இதுவரைப் பயன்படுத்தி வருகிறது. மற்றபடி, தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய தண்ணீரை உறுதிசெய்ய உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, நடுவர் மன்றத் தீர்ப்பு என எல்லாமிருந்தும் கர்நாடக அரசு அவற்றை ஏற்க மறுத்து அட்டூழியம் செய்கிறது.

காவிரியாற்றின் `குறுக்கே அணை கட்டுவதையும் தடுக்கவும், தமிழ்நாட்டுக்கு உரிய நதிநீர் பங்கீட்டைத் தரவும் சட்டவிதிகள் வலியுறுத்துகின்றன. நடுவர் மன்றத் தீர்ப்பு, உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் வழிகாட்டுகின்றன. இருந்தபோதிலும், அவற்றைப் புறந்தள்ளி எதேச்சதிகாரப்போக்கோடு நடந்துகொள்கிறது கர்நாடக அரசு. தமிழ்நாட்டுக்கான உரிய நதிநீர் பங்கீட்டையும், நீதியையும் உறுதிசெய்ய சட்டப்பூர்வக் காரணிகள் இருக்கின்றன. அவற்றைக் கர்நாடக அரசு ஒருநாளும் மதித்து ஏற்பதில்லை என்பதுதான் இங்கிருக்கும் முதன்மைச்சிக்கல்.

உண்மை இவ்வாறிருக்க, மேகேதாட்டுக்கு எதிராக நடுவர் மன்றம் அமைக்கக் கோரும் கோரிக்கை என்பது துளியும் ஏற்புடையதல்ல; அது தேவையற்ற சிக்கலையே புதிதாய் உருவாக்கும். நடுவர் மன்றம் கோரி இயற்றப்பட்ட இத்தீர்மானம் முழுக்க முழுக்க தமிழின விரோதமாகும். அதனைக் கண்டித்து வரும் 27.06.2026 அன்று தஞ்சாவூரில் தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தலைவர் பெ.மணியரசன் தலைமையில் நடக்கவிருக்கும் சட்டமன்றத் தீர்மான நகலெரிப்புப் போராட்டத்தில் நாம் தமிழர் கட்சியும் பங்கேற்கிறது எனப் பேரறிவிப்புச் செய்கிறேன்.

ஆகவே, காவிரியாற்றின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கு எதிர்ப்பதாகக் கூறி, நடுவர் மன்றம் அமைக்கக் கோரும் முடிவைக் கைவிட்டு, அத்தீர்மானத்தைப் பின்வாங்கி, புதிய தீர்மானத்தை இயற்ற வேண்டுமெனவும், அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டி விவாதித்து, தமிழ்நாட்டுக்குரிய காவிரி நதிநீர் பங்கீட்டு உரிமையை உறுதிசெய்வதற்கு முன்னெடுக்க வேண்டிய சட்டப்போராட்டங்களையும், ஆக்கப்பூர்வப் பணிகளையும் தொடங்கிட வேண்டுமெனவும் தவெக அரசுக்கு நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# மாநகராட்சி வாட்ஸ்அப் செயலியில் 44 சேவைகள்; 10 மாதங்களில் 1.86 லட்சம் பேர் பயன்



சென்னை, ஜூன்.24–
வாட்ஸ்அப் செயலியில் வழங்கப்படும் 44 விதமான சேவைகளை இதுவரை 1.86 லட்சம் பேர் பெற்று பயன் அடைந்திருப்பதாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வழங்கப்படும் அத்தியாவசிய சேவைகளை பொதுமக்கள் எளிதில் பெறுவதற்கு ஏதுவாக கடந்த 2025ம் ஆண்டு ஆகஸ்ட் 25ம் தேதி வாட்ஸ்அப் செயலி சேவை புதிதாக அறிமுகப்படுத்தப் பட்டது.

அதன்படி, பொதுமக்கள் மாநகராட்சியின் 94450 61913 என்ற வாட்ஸ் அப் எண்ணுக்கு பிவீ அல்லது வணக்கம் என்ற குறுஞ்செய்தி அனுப்பி தமிழ், ஆங்கிலம் உள்பட 12க்கும் மேற்பட்ட மொழிகளில் 44 வகையான சேவைகளை எளிதில் பெறலாம்.

இந்த வாட்ஸ்அப் செயலி மூலம் சொத்து வரி, தொழில் வரி, வணிக வரி, வணிக வளாக வாடகை, குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணங்கள் செலுத்துதல், வணிக உரிமம் மற்றும் விளம்பரப் பேனர்கள் உரிமம், முதல்வர் படைப்பகம், மெரினா நீச்சல் குளம், சமூகக் கூடம், ரிப்பன் கட்டிடத்தில் மரபு நடைபயணம், வீடுதோறும் தேவையற்ற சோபா மற்றும் மெத்தை கழிவுகள் பெறுதல், கட்டிடம் மற்றும் கட்டுமானக் கழிவுகள் உள்ளிட்ட சேவைகளுக்கான முன்பதிவுகள், கட்டிட வரைபடத்துக்கான நகர திட்டமிடல், பிறப்புஇறப்புச் சான்றிதழ் பதிவிறக்கம் செய்தல், குழந்தையின் பெயர் சேர்த்தல், புகார் தெரிவித்தல் மற்றும் தகவல் சேவைகள் உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படுகின்றன.தடையற்ற சேவையை வழங்க, இந்த தளம் செயற்கை நுண்ணறிவை (ஏஐ) நேரடிப் பணியாளர் உதவியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

இதன் வாயிலாக சிக்கலான கோரிக்கைகள் விரைவான தீர்வுக்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த வாட்ஸ் அப் செயலியை பொதுமக்கள் 24 மணிநேரமும் தொடர்பு கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் காகிதமில்லா பயன்பாட்டை சாத்தியமாக்குவதோடு, மக்களுக்கு தாமதமின்றியும், எவ்வித அலைச்சலுமின்றியும் எளிதாக சேவைகளை பெற முடிகிறது.

இந்த வாட்ஸ்அப் செயலி சேவை பொதுமக்களிடம் பெரும் வரவேற்பை பெற்று ஒரு டிஜிட்டல் சேவைத் தளமாக செயல்பட்டு, 2.14 லட்சத்துக்கும் அதிகமான பயனர்கள் பதிவு செய்து பயன்படுத்தி வருகின்றனர்.

இதில் 1.86 லட்சத்துக்கும் அதிகமானோர் தங்களுக்குத் தேவையான சேவைகளை பெற்று பயனடைந்துள்ளனர். மேலும், ஒருங்கிணைந்த கட்டணச் சேவைகள் மூலமாக ரூ.43.76 கோடி வருவாய் மாநகராட்சிக்கு கிடைத்துள்ளது.

பொதுமக்கள் மாநகராட்சியின் இந்த வாட்ஸ்அப் செயலியை பயன்படுத்தி தேவையான சேவைகளை பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்புக: தமிழக அரசுக்கு அன்புமணி கோரிக்கை



சென்னை, ஜூன்.24–
அரசுப் பள்ளிகளில் காலியாக இருக்கும் ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், அதன் மூலம் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை உயர்த்த வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "தமிழ்நாட்டில் பள்ளிக்கல்வித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசுப் பள்ளிகளில் 18,107 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதாக பள்ளிக்கல்வித்துறை தெரிவித்திருக்கிறது. காலியாக இருந்த ஆயிரக்கணக்கான ஆசிரியர் பணியிடங்கள் ஏற்கெனவே ரத்து செய்யப்பட்டு விட்ட பிறகும் கூட, பள்ளிக்கல்வித் துறையில் மட்டும் இவ்வளவு ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பது ஏழை குழந்தைகளின் கல்வியை கடுமையாக பாதிக்கும்.

பள்ளிக்கல்வித் துறை வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களில், ஒட்டுமொத்த ஆசிரியர் பணியிடங்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 14,248 என்றும், அவற்றில் கடந்த மே மாத கடைசி பணி நாள் நிலவரப்படி 96,141 ஆசிரியர்கள் பணியில் இருப்பதாகவும், மீதமுள்ள 18,107 பணியிடங்கள் காலியாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 7,252 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள், 2,833 முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் என்றும் மீதமுள்ளவை இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் இப்போது காலியாக இருப்பதாக கூறப்படும் ஆசிரியர் காலி பணியிடங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு ஆகும். கடந்த பல ஆண்டுகளாக நிரப்பப்படாமல் இருந்த ஆசிரியர் பணியிடங்கள் ரத்து செய்யப்பட்டு, மீதமுள்ள இடங்கள் மட்டுமே காலி பணியிடங்களாக அரசால் கணக்கு காட்டப்பட்டுள்ளன.

பள்ளிக் கல்வித் துறையால் அதிகாரப்பூர்வமாக கணக்கில் காட்டப்பட்டுள்ள காலியிடங்களின் எண்ணிக்கை, மொத்தப் பணியிடங்களின் எண்ணிக்கையில் 15.85% ஆகும். தமிழக அரசின் கல்வித்துறையில் இரு முக்கியப் பிரிவுகள் உள்ளன. தொடக்கக் கல்வித் துறை, பள்ளிக்கல்வித் துறை ஆகியவை தான் அந்த இரு பிரிவுகள் ஆகும்.

பள்ளிக்கல்வித் துறையில் மட்டும் 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கும் நிலையில், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர் பணியிடங்களைக் கொண்ட தொடக்கக் கல்வித் துறையில் குறைந்தது 16 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கும். ஒட்டு மொத்தமாக 34,000 ஆசிரியர் பணியிடங்களை காலியாக வைத்துக் கொண்டு தரமான கல்வியை எவ்வாறு வழங்க முடியும் ?

தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளின் கல்வித் தரம் நாளுக்கு நாள் குறைந்து வருவதற்கு காரணமே போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படாதது தான். பள்ளிக்கல்வித் துறை, தொடக்கக் கல்வித்துறை ஆகிய இரண்டுக்கும் சேர்த்து 2013 14ம் கல்வியாண்டுக்குப் பிறகு இப்போது வரையிலான 12 ஆண்டுகளில் 3,192 பட்டதாரி ஆசிரியர்களும், 2,768 இடைநிலை ஆசிரியர்களும் மட்டுமே நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அதாவது ஆண்டுக்கு சராசரியாக 496 இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் மட்டுமே புதிதாக நியமிக்கப் பட்டிருக்கின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள அரசு பள்ளிகளில் சுமார் 2 லட்சம் ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களில் ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 5,000 முதல் 6,000 ஆசிரியர்கள் வரை ஓய்வு பெறுகின்றனர். 12 ஆண்டுகளில் குறைந்தது 70 ஆயிரம் ஆசிரியர்கள் ஓய்வு பெற்றிருக்கக் கூடும் என்று கூறப்படும் நிலையில், 3,192 பட்டதாரி ஆசிரியர்கள், 2,768 இடைநிலை ஆசிரியர்கள், 5 கட்டங்களாக 11,420 முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் என ஒட்டுமொத்தமாக 17,380 ஆசிரியர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். 12 ஆண்டுகளாக 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர் பணியிடங்களை நிரப்பாமல் கல்வித் தரத்தை உயர்த்துவது எந்தக் காலத்திலும் சாத்தியமாகாது.

ஒரு காலத்தில் ஒட்டுமொத்த இந்தியாவும் வியக்கும் வகையில் உயர்ந்து நின்ற தமிழ்நாட்டின் அரசு பள்ளிகள், இப்போது பிற மாநிலங்களுடன் போட்டியிட முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றன.

இதற்குக் காரணம் அரசு பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இல்லாததும், ஆசிரியர்கள் போதிய எண்ணிக்கையில் நியமனம் செய்யப்படாததும் தான். இதனால் அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை வேகமாக வீழ்ச்சி அடைந்து வருகிறது. நடப்பாண்டில் கூட அரசு பள்ளிகளில் 5 லட்சம் மாணவர்களை சேர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், இதுவரை ஒன்றரை லட்சம் புதிய மாணவ, மாணவியரை சேர்க்க முடியவில்லை.

சமூக மாற்றத்தையும், முன்னேற்றத்தையும் ஏற்படுத்துவதற்கு அரசு பள்ளிகளால் தான் முடியும். அந்த ஒற்றை இலக்கை அடைவதற்காகவாவது அரசு பள்ளிகள் வலிமையுடன் திகழ வேண்டும். அதற்காக அரசு பள்ளிகளில் காலியாக இருக்கும் ஆசிரியர் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதன் மூலம் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை உயர்த்த வேண்டும்" என்று அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

# கே.வி.குப்பத்தில் நடந்த ஆட்டுச்சந்தையில் விற்பனை அமோகம்; போட்டி போட்டு வாங்கிய வியாபாரிகள்



கே.வி.குப்பம், ஜூன்.24–
கே.வி.குப்பத்தில் நடந்த ஆட்டுச்சந்தையில் வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கியதால் விற்பனை அமோகமாக நடந்தது.கே.வி.குப்பத்தில் திங்கள் கிழமை தோறும் ஆட்டுச்சந்தை நடைபெறுவது வழக்கம்.

மாவட்டத்தில் பிரபலமான ஆட்டு சந்தைகளுள் ஒன்றான இந்த ஆட்டுச்சந்தையில் பொங்கல், தீபாவளி, ரம்ஜான், பக்ரீத், கிறிஸ்துமஸ் உள்ளிட்ட விழா காலங்களில் சந்தைகள் களைகட்டும். புரட்டாசி மாதம், உட்பட சில நாட்களில் நடைபெறும் சந்தைகள் மந்தமாகவே இருக்கும். தொடர்ந்து சில வாரங்களில், விற்பனை மந்தமாகவும், களைகட்டுவது என்று மாறி மாறி நடைபெறும்.

இந்நிலையில் திங்கள் கிழமையான நேற்று வழக்கம்போல் சந்தை கூடியது. இதில் கே.வி.குப்பம் உள்ளிட்ட சுற்றுப்புற கிராமங்களில் இருந்தும், காட்பாடி, குடியாத்தம், வேலூர், அணைக்கட்டு ஆகிய பகுதிகளில் இருந்தும், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், உள்ளிட்ட அருகிலுள்ள உள்ள மாவட்டங்களில் இருந்தும், அண்டை மாநிலமான கர்நாடகா ஆந்திரா ஆகிய பகுதிகளில் இருந்தும், நூற்றுக்கணக்கான ஆடுகள், இறைச்சிக்காக வெட்டப்படும் ஆடுகள், வளர்பதற்காக வாங்கும் ஆடுகள், என ஆடுகளை ஜோடி, ஜோடியாகவும் வாங்குபவர்கள் என பல்வேறு கிராமங்களில் இருந்து வந்தனர்.

மேலும், தற்போது கோயில் திருவிழா சீசன் என்பதால், நேற்று நடைபெற்ற ஆட்டுச்சந்தையில் ஆடுகள் வர்த்தகம் அமோகமாக விற்பனையானது. அதுமட்டுமின்றி ஆடுகளின் விலை கூடுதலாக இருந்தாலும், அதனை வியாபாரிகள் போட்டி போட்டு ஆடுகளை அதிகவிலை கொடுத்து வாங்கி சென்றனர். இதனால், ஆடுகளை விற்பனைக்கு கொண்டு வந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

# “சினிமாவில் நடிப்பது போலவே பேரவையிலும்” முதல்வர் விஜய் மீது நயினார் நாகேந்திரன் தாக்கு



சென்னை, ஜூன்.24–
“முதல்வர் விஜய் இனிமேலாவது தனது தகுதியை அறிந்து, அதற்கான சட்டப்பேரவை மரபோடு நடந்துகொள்ள வேண்டும்” என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, “அமைச்சர் நிர்மல் குமார் சட்டம் படித்து இருக்கிறாரா என்று எனக்குத் தெரியவில்லை. திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்ற வேண்டும் என உயர் நீதிமன்ற நீதிபதியின் உத்தரவை நிறைவேற்ற முடியாது என கூறினால், அரசியலமைப்பின்படி அவர் சட்டமன்ற உறுப்பினராக மட்டுமில்லாமல் அமைச்சராக கூட நீடிக்க தகுதி இல்லாத நபர்.

தவெகவைப் போல, பாஜக சாதாரண கட்சி கிடையாது. இனி எத்தனை தேர்தல்கள் வந்தாலும் பாஜக தான் நாட்டை ஆளப்போகின்ற கட்சி. தவெக அடுத்த தேர்தலில் இருக்குமா, இருக்காதா எனத் தெரியவில்லை.

சட்டப்பேரவையில் அதிகமாக பேசி வருவது நமது முதல்வர்தான்; அதிகமாக பேசி பதிலுரை கொடுத்து வருகிறார். சட்டப் பேரவையில், சட்டமன்ற உறுப் பினர்களின் ஒரு கேள்விக்கு கூட முதல்வர் பதில் சொன்னது கிடையாது. அப்படிப்பட்ட முதல்வரின் அமைச்சரவையில்தான் அமைச்சராக நிர்மல் குமார் இருக்கிறார்.

நிர்மல் குமார் பாஜகவில் இருந்தார்; அதன்பிறகு அதிமுகவுக்கு சென்றார். இப்போது தவெகவில் இருக்கிறார். அடுத்த வருடம் வேறு எந்த கட்சிக்கு செல்வார் என தெரியாது.

முதல்வராக பதவி ஏற்க ஆளுநர் மாளிகை க்கு எத்தனை முறை சென்றீர்கள்? நிர்மல் குமார், நீங்கள் சட்டம் படித்தவர்தானே... முதல்வரை பதவி ஏற்க விடுங்கள் என யாருக்கெல்லாம் நீங்கள் போன் செய்து சொன்னீர்கள் என்பதை நான் சொல்லட்டுமா? அப்போது மட்டும் பாஜக இனிக்கிறதா?

சட்டம் சரியாக படிக்கவில்லை; சரியாக எழுத தெரியவில்லை என்று தான் ஆளுநர் திருப்பி அனுப்பினார்.

சட்டப் பேரவையில் தேவையான விஷயங்களை மட்டும் பேசுங்கள். கடந்த ஆட்சியில் மின்வெட்டு பிரச்சினைக்கு அணில் வந்தது என சொன்னார்கள்; தற்போது குரங்கு வந்தது என்று சொல்கிறார்” என்றார்.

முதல்வர் விஜய் இன்று சட்டப்பேரவையில் செய்த சைகை குறித்து கேள்விக்கு பதிலளித்த அவர், “முதல்வர் விஜய் சினிமாவில் நடிப்பது போலவே நினைத்துக் கொண்டு சட்டப்பேரவையிலும் இருக்கிறார்.

சட்டமன்ற மரபுப்படி இவ்வாறு செய்கைகளை காட்டக் கூடாது; இதுபோன்று முன்பு செய்தவர்களின் நிலை என்ன ஆனது என்பதும் உங்களுக்கு தெரியும். இனிமேலாவது முதல்வர் தனது தகுதியை அறிந்து, அதற்கான சட்டப்பேரவை மரபோடு நடந்து கொள்ள வேண்டும்” என்று அவர் கூறினார்.


# மாநகராட்சி வாட்ஸ்அப் செயலியில் 44 சேவைகள்; 10 மாதங்களில் 1.86 லட்சம் பேர் பயன்

சென்னை, ஜூன்.24–
பெருநகர சென்னை மாநகராட்சி நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வழங்கப்படும் அத்தியாவசிய சேவைகளை பொதுமக்கள் எளிதில் பெறுவதற்கு ஏதுவாக கடந்த 2025ம் ஆண்டு ஆகஸ்ட் 25ம் தேதி வாட்ஸ்அப் செயலி சேவை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன்படி, பொதுமக்கள் மாநகராட்சியின் 94450 61913 என்ற வாட்ஸ்அப் எண்ணுக்கு Hi அல்லது வணக்கம் என்ற குறுஞ்செய்தி அனுப்பி தமிழ், ஆங்கிலம் உள்பட 12க்கும் மேற்பட்ட மொழிகளில் 44 வகையான சேவைகளை எளிதில் பெறலாம்.

இந்த வாட்ஸ்அப் செயலி மூலம் சொத்து வரி, தொழில் வரி, வணிக வரி, வணிக வளாக வாடகை, குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணங்கள் செலுத்துதல், வணிக உரிமம் மற்றும் விளம்பரப் பேனர்கள் உரிமம், முதல்வர் படைப்பகம், மெரினா நீச்சல் குளம், சமூகக் கூடம், ரிப்பன் கட்டிடத்தில் மரபு நடைபயணம், வீடுதோறும் தேவையற்ற சோபா மற்றும் மெத்தை கழிவுகள் பெறுதல், கட்டிடம் மற்றும் கட்டுமானக் கழிவுகள் உள்ளிட்ட சேவைகளுக்கான முன்பதிவுகள், கட்டிட வரைபடத்துக்கான நகர திட்டமிடல், பிறப்புஇறப்புச் சான்றிதழ் பதிவிறக்கம் செய்தல், குழந்தையின் பெயர் சேர்த்தல், புகார் தெரிவித்தல் மற்றும் தகவல் சேவைகள் உள்ளிட்ட சேவைகள் வழங்கப்படுகின்றன.தடையற்ற சேவையை வழங்க, இந்த தளம் செயற்கை நுண்ணறிவை (ஏஐ) நேரடிப் பணியாளர் உதவியுடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது. இதன் வாயிலாக சிக்கலான கோரிக்கைகள் விரைவான தீர்வுக்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்படுகின்றன. இந்த வாட்ஸ் அப் செயலியை பொதுமக்கள் 24 மணிநேரமும் தொடர்பு கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் காகிதமில்லா பயன்பாட்டை சாத்தியமாக்குவதோடு, மக்களுக்கு தாமதமின்றியும், எவ்வித அலைச்சலுமின்றியும் எளிதாக சேவைகளை பெற முடிகிறது. இந்த வாட்ஸ்அப் செயலி சேவை பொதுமக்களிடம் பெரும் வரவேற்பை பெற்று ஒரு டிஜிட்டல் சேவைத் தளமாக செயல்பட்டு, 2.14 லட்சத்துக்கும் அதிகமான பயனர்கள் பதிவு செய்து பயன்படுத்தி வருகின்றனர்.

பொதுமக்கள் மாநகராட்சியின் இந்த வாட்ஸ்அப் செயலியை பயன்படுத்தி தேவையான சேவைகளை பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




# காரிமங்கலம் அருகே ஏரி கரையோரம் இறைச்சி கழிவுகள் கொட்டுவதால் மாசு

காரிமங்கலம், ஜூன்.24–
காரிமங்கலம் அருகே ஏரி கரையோரம் கொட்டப்படும் இறைச்சி கழிவு, குப்பைகளால் நீர் மாசு அபாயம் ஏற்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டம், காரிமங்கலம் பாலக்கோடு ரோட்டில் நாகல் ஏரி அமைந்துள்ளது.

சுமார் 40 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த ஏரி, காரிமங்கலம் நகருக்கு நிலத்தடி நீர் ஆதாரமாக உள்ளது. மழை நீர் மட்டுமின்றி, கிருஷ்ணகிரி அணை உபரி நீர் ஏரிக்கு வருவதால், இதன் அருகேயுள்ள விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று, விவசாயத்திற்கு முக்கிய பங்கு வகிக்கிறது.


மெயின் ரோட்டில் உள்ள இந்த ஏரி, சுமார் ரூ.77 லட்சம் மதிப்பில் சீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டதாக, பேரூராட்சி நிர்வாகம் கூறிவரும் நிலையில், சீரமைக்கப்பட்ட ஏரிக்கரை பகுதியில் குப்பைகள் கொட்டும் இடமாக மாறி உள்ளது.

ஏரியின் மேற்கு கரை பகுதியில், மெயின் ரோட்டின் அருகாமையில் ஏரி பகுதியில் இறைச்சி கழிவுகள் மற்றும் முட்டை ஓடுகள், குப்பைகள் கொட்டப் பட்டு சுகாதார சீர்கேட்டிற்கு அடையாளமாக உள்ளது.

இப்பகுதியில் இயங்கி வரும் டாஸ்மாக் கடை மற்றும் அருகேயுள்ள கடைகளில், பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் டம்ளர்கள் உள்பட பிளாஸ்டிக் கழிவுகளும் ஏரியில் கொட்டப்பட்டு வருகிறது. இதனால் ஏரிக்கரை பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு துர்நாற்றம் வீசி வருகிறது.

மேலும் நீர் மாசும் ஏற்பட்டு வருகிறது. பலமுறை கோரிக்கை விடுத்தும், பேரூராட்சி நிர்வாகம் அலட்சிய போக்குடன் செயல்பட்டு வருகிறது. எனவே, குப்பைகள் மற்றும் கழிவுகளை ஏரியில் கொட்டுவதை தடுக்க, மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கே.என்.நேரு மீதான லஞ்ச ஒழிப்பு துறை வழக்கு: ஜூலை 10 வரை நடவடிக்கை எடுக்கக் கூடாது என ஐகோர்ட் உத்தரவு



சென்னை, ஜூன்.24–
முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்டோரின் மறு ஆய்வு மனுக்கள் மீதான விசாரணையையும், முந்தைய திமுக அரசு தாக்கல் செய்த மறு ஆய்வு மனுவை வாபஸ் பெற அனுமதி கோரி தவெக அரசு தாக்கல் செய்த மனு மீதான விசாரணையையும் ஜூலை 10ம் தேதிக்கு நீதிபதிகள் தள்ளிவைத்துள்ளனர்.

கடந்த திமுக ஆட்சி காலத்தில் நகராட்சி நிர்வாக துறையில், 2,538 உதவி பொறியாளர்கள் மற்றும் இளநிலை பொறியாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் நியமனத்துக்கு 634 கோடி ரூபாய் லஞ்சம் பெறப்பட்டுள்ளதாக கூறி, அமலாக்கத் துறை அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில், வழக்குப் பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யாததை அடுத்து, அதிமுக எம்.பி.இன்பதுரை தரப்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதேபோல வழக்குப் பதிவு செய்ய பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு தரப்பிலும் மனுக்கள் தாக்கல் செய்யப்படிருந்தன.

நீதிமன்ற அவமதிப்பு, மறு ஆய்வு மனு நிலுவையில் இருந்த சூழலில், லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப் பதிவு செய்துள்ளதாக நேரு தரப்பில் முறையீடு செய்யப்பட்டதை அடுத்து, லஞ்ச ஒழிப்புத் துறை பதிவு செய்துள்ள வழக்கின் மீது இன்றைய தினம் வரை (ஜூன் 23 வரை) மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கக் கூடாது என தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்குகள், தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தன. அப்போது, முன்னாள் அமைச்சர் நேருவின் சகோதரர் உள்ளிட்டோர் தரப்பிலும், வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்ற உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

தமிழக அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்ற உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி தமிழக அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை திரும்பப் பெறக் கோரி மனுத் தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்தார்.

ஆட்சி மாறினாலும், முந்தைய அரசு எடுத்த நிலைபாட்டுக்கு மாறாக தற்போதைய அரசு எடுத்துள்ள நிலைபாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும், பிரதான வழக்கில் தங்கள் தரப்பு விளக்கத்தை கேட்காமலேயே உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளதால், அந்த உத்தரவை மறு ஆய்வு செய்ய வேண்டும் என நேரு உள்ளிட்டோர் தரப்பில் ஆட்சேபம் தெரிவித்து வாதிடப்பட்டது.

இதையடுத்து, நேரு உள்ளிட்டோரின் மறு ஆய்வு மனுக்கள் மீதான விசாரணையையும், முந்தைய திமுக அரசு தாக்கல் செய்த மறு ஆய்வு மனுவை வாபஸ் பெற அனுமதி கோரி தற்போதைய அரசு தாக்கல் செய்த மனு மீதான விசாரணையையும் நீதிபதிகள், ஜூலை 10ம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளனர். அதுவரை இது சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட வழக்கின் மீது மேல் நடவடிக்கை எடுக்க கூடாது என்ற இடைக்கால உத்தரவையும் நீட்டித்து நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.



# தமிழக முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் அவர்களின் 52 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு உடுமலை நகரில் பசுமை மாரத்தான் ஓட்டப்பந்தயம்

திருப்பூர், ஜூன்.24-

திருப்பூர் தெற்கு மாவட்டம் தமிழக வெற்றி கழகத்தின் இளைஞர் அணி சார்பாக உடுமலை நகரில் பசுமை மாரத்தான் ஓட்டப் பந்தயம் தமிழக முதலமைச்சர் சி ஜோசப் விஜய் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் திருமலை அவர்கள் தலைமையில் நடைபெற்றது . உடுமலை நகர செயலாளர் அபுதாஹிர், உடுமலை நகர இளைஞரணி பொறுப்பாளர்கள், நகர இளைஞரணி அமைப்பாளர் நன்னிலன் மற்றும் நகர இளைஞரணி இணை அமைப்பாளர் முகமது சல்மான் ஆகியோர் முன்னிலையில் 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் பசுமை மாரத்தான் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டார்கள் இந்நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருப்பூர் மாவட்ட செயலாளர் திருமலை அவர்கள் பரிசு வழங்கி சிறப்பித்தார். முதல் பரிசு மற்றும் இரண்டாம் பரிசு மூன்றாம் பரிசு ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக மழை உடுமலை சார்பாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டது . இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு உணவு வழங்கப்பட்டது.




# மகேஸ் நவமி தினத்தை முன்னிட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரத்ததானம் மற்றும் பொது மக்களுக்கு அன்னதானம்

சேலம், ஜூன்.24-

மகேஸ் நவமி தினத்தை முன்னிட்டு சேலம் ஜில்லா மகேஸ்வரி மண்டல் அமைப்பினர் சேலம் அரசு மோகன் மூலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரத்ததானம் மற்றும் பொது மக்களுக்கு அன்னதானம்

மகேஸ் நவமி தினத்தை முன்னிட்டு சேலம் ஜில்லா மகேஸ்வரி மண்டல் அமைப்பினர், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இரத்ததானம் வழங்கினர். மேலும் நோயாளிகள் மற்றும் பொதுமக்களுக்கு 1000க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கினர். இதில் சேலம் ஜில்லா மகேஸ்வரி அமைப்பின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்



# மாவட்டச் செயலாளர் எம். எல். வாசுதேவன் தலைமை! ரெட்டியார்சத்திரம் ஒன்றியமே ஸ்தம்பித்த முதல்வர் விஜய் பிறந்தநாள் விழா!

திண்டுக்கல், ஜூன்.24-

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும், தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கரிசல்பட்டி ஊராட்சியில் ஏழை எளிய பொதுமக்களுக்குப் பிரம்மா ண்டமான முறையில் அன்னதானம் மற்றும் சிறப்புப் பிரார்த்தனைகள் வழங்கும் மாபெரும் மக்கள் நல விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் தலைமையில் ஆன்மீகப் பிரார்த்தனை:

கரிசல்பட்டி ஊராட்சியில் நடை பெற்ற இம்மாபெரும் பிறந்தநாள் உன்னத நிகழ்விற்கு, தமிழக வெற்றிக் கழகத்தின் திண்டுக்கல் மத்திய மாவட்டச் செயலாளர் எம். எல். வாசுதேவன் முறைப்படி தலைமை தாங்கி, மக்கள் நலத்திட்ட உதவிகளைத் தொடங்கி வைத்தார். ரெட்டியார்சத்திரம் மத்திய ஒன்றியச் செயலாளர் தமிழரசன் மற்றும் ஒன்றியப் பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலை வகித்து நிகழ்வைச் சிறப்பித்தனர். விழாவையொட்டி, அங்குள்ள தேவாலயத்தில் முதலமைச்சரின் நீண்ட ஆயுளுக்காகவும் ஆரோக்கியத்திற்காகவும் சிறப்புப் பிரார்த்தனைகள் மற்றும் பூஜைகள் மிக பவ்யமாக நடத்தப்பட்டன.

ஆயிரக்கணக்கானோருக்கு அறுசுவை அன்னதானம்:

இவ்விழாவிற்கான ஒட்டுமொத்தப் பிரம்மாண்ட ஏற்பாடுகளையும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத் துணைச் செயலாளரும், மகளிர் அணிச் செயலாளருமான திவ்யா சுரேஷ், செயற்குழு உறுப்பினர் ஜோயல் எலிசன் மற்றும் கழக நிர்வாகி சந்தோஷ் ராஜா ஆகியோர் மிக நேர்த்தியாக முன்னின்று செய்திருந்தனர். கரிசல்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த சாமானிய உழைப்பாளர்கள், ஏழை எளிய பொதுமக்கள் எனச் சுமார் ஆயிரக்கணக்கானோருக்குத் தங்குதடையின்றி தூய்மையான அறுசுவை மதிய உணவு அள்ளி அள்ளி வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொதுமக்கள், தவெக தம்பிகளின் இந்த உன்னத அன்னதானத்தைப் பெற்றுக்கொண்டு, முதலமைச்சர் விஜய் அவர்களுக்கு மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். மேலும், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக அவர் மேற்கொண்டு வரும் தீர்க்கமான பணிகளைப் பாராட்டிய பொதுமக்கள், அவரது மக்கள் சேவைகள் தொடர்ந்து கடைக்கோடி மனிதனுக்கும் பயனளிக்க வேண்டும் என நெகிழ்ச்சியோடு வாழ்த்தினர்.

# புதுவை அரசு மாவட்ட நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையும் இனைந்து புதுச்சேரி மாநிலத்தில் வரும் வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த முதற்கட்ட ஆலோசனை கூட்டம்

புதுச்சேரி, ஜூன்.24-

புதுவை அரசு மாவட்ட நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையும் இனைந்து புதுச்சேரி மாநிலத்தில் வரும் வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த முதற்கட்ட ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் தலைமையில் ஆட்சியர் வளாகத்தில் இன்று காலை நடைபெற்றன. இக்கூட்டத்தில் கூடுதல் மாவட்ட ஆட்சியர் திரு. சுதாகர் காவல் கண்காணிப்பாளர் (வடக்கு) மற்றும் காவல்துறை. நகராட்சி நிர்வாகம், மின்துறை, பொதுப்பணித்துறை, தீயணைப்பு துறை, வேளாண்துறை. கல்வித்துறை, மீண்வளத்துறை. கால்நடை பராமரிப்புத்துறை. அனைத்து கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில் துறை அதிகா ரிகளுடன் பேசிய மாவட்ட ஆட்சியர் அவர்கள் செப்டம்பர் மாத இறுதிக்குள் புதுவையில் உள்ள அனைத்து வாய்க்கால்களையும் தூர் வார வேண்டும் எனவும் பொதுப்பணித்துறை




அதிகாரிகள் தாங்கள் தூர் வாரும் முக்கிய வாய்க்கால்களின் பெயர் மற்றும் பகுதியை கொம்யூன் பஞ்சாயத்து ஆனையர்கள் மற்றும் பேரிடர் மேலாண்மை துறைக்கு தெரிவித்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பாக நகர்ப்புறங்களில் சென்ற பருவ மழையின் போது மழை நீர் தேக்கம் அதிகம் ஏற்பட்ட இந்திரா காந்தி சதுக்கம் உள்ளிட்ட இடங்களில் கூடுதல் கவனம் செலுத்தி வாய்க்கால்களை தூர் வாரி அதில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அப்புறப்படுத்தி நீர் தேங்காத வண்ணம் பார்த்துக் கொள்ளும்படியும் கிராமப்புறங்களில் அமைந்துள்ள வாய்க்கால்களையும் விரைவில் தூர் வாரி செப்டம்பர் மாதம் முதல் வாரத்திற்குள் பணிகளை செய்து முடிக்க வேண்டும் எனவும் உத்தரவு பிறப்பித்தார்கள். புதுவையில் உள்ள அனைத்து குடிநீர் தொட்டிகளையும் சுத்தம் செய்ய வேண்டும் எனவும் மேலும் மழைக் காலங்களில் கூடுதல் மோட்டார் பம்புகள் தயார் நிலையில் வைக்க வேண்டும் எனவும் பொதுமக்களுக்கு சுத்தமான குடியிர் விநியோகம் செய்ய வேண்டும் படியும் சென்ற முறை நீர் தேங்கிய கிருஷ்ணா நகர், ரெயின்போ நகர், வெங்கடா நகர் மற்றும் பூமியான் பேட்டை உள்ளிட்ட தாழ்வான பகுதிகளில் அமைந்துள்ள வாய்க்கால்களை தூர்வாரி மீண்டும் நீர் தேங்காத அளவிற்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சியர் பொதுப்பணித்துறை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை அறிவுறுத்தினார்கள். மேலும் அனைத்து கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்கள் புதுவையில் உள்ள அனைத்து ஏரிகளையும் கண்காணித்து கரையை பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தீயணைப்பு துறை அதிகாரிகள் போதுமான பாதுகாப்பு உபகரணங்களை தயார் நிலையில் வைத்துக் கொள்ள கேட்டுக் கொண்டார்கள். மேலும் சுகாதாரத் துறை மூலம் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும் எனவும் போதுமான மருந்து மாத்திரைகள் தயார் நிலையில் வைத்துக் கொள்ளும் படியும் அறிவுறுத்தினார்கள் மின்துறை அதிகாரிகள் தாழ்வான பகுதிகளின் உள்ள மின் ஒயர்களை சரி செய்ய வேண்டும் எனவும் போதுமான மின்கம்பங்கள் மற்றும் சாலை விளக்குகள் போர்க்கால அடிப்படையில் தயார் நிலையில் இருக்கும் படியும் அந்தந்த துறைகளும் கட்டுப்பாட்டு அறைகள் சரியாக இயங்குகின்றவா என்பது உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்கள். வரும் செப்டம்பர் மாதம் முதல் வாரத்திற்குள் சம்பந்தப்பட்ட துறைகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை நிறைவு செய்து பருவமழையை எதிர்கொள்ள தயார் நிலையில் இருக்கும்படி அனைத்து துறைகளுக்கும் ஆட்சியர் அவர்கள் உத்தரவு பிறப்பித்தார்கள்.

# நெகிழ்ச்சிச் சந்திப்பு!" முதல்வர் விஜய் பிறந்தநாளில் நேரில் வாழ்த்துப் பெற்ற ஸ்ரீவைகுண்டம் எம்எல்ஏ அன்னை விஜி சரவணன்



ஸ்ரீவைகுண்டம் ஜூன் 24-

தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவரும், தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அன்னை விஜி சரவணன், முதலமைச்சரை நேரில் சந்தித்துத் தனது நெஞ்சார்ந்த பிறந்தநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து ஆசி பெற்றார். தொகுதி வளர்ச்சி குறித்து அதிரடி ஆலோசனைகள்: தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த மிக முக்கியமான சந்திப்பின் போது, ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதியின் ஒட்டுமொத்த உள்கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகள், சாமானிய ஏழை எளிய மக்களின் அத்தியாவசியத் தேவைகள் மற்றும் பல்வேறு புதிய பொதுநலத் திட்டங்களை செயல்படுத்துவது குறித்து விவாதித்துக் கலந்துரையாடப்பட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன. மக்கள் சேவையில் சமரசமற்ற உறுதி: இச்சந்திப்பைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் அன்னை விஜி சரவணன், "முதலமைச்சர் அவர்களின் தீர்க்கமான வழிகாட்டுதலின்படி, ஸ்ரீவைகுண்டம் தொகுதி மக்களின் ஒட்டுமொத்த நல்வாழ்விற்காகவும், அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் தங்குதடையின்றித் தொடர்ந்து தரைமட்ட அளவில் போர்க்கால உத்தியோடு பணியாற்றப் போவதாக" அசாத்திய உறுதிபடத் தெரிவித்தார். இந்த உன்னதச் சந்திப்பு நிகழ்வானது, தூத்துக்குடி மாவட்டத் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பல்லாயிரக்கணக்கான ஆதரவாளர்களிடையே ஆகப்பெரும் மகிழ்ச்சியையும், புதிய அரசியல் எழுச்சியையும் அப்பட்டமாக ஏற்படுத்தியுள்ளது.

# தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாள் விழா: மேலக்கரிசல்குளத்தில் நலத்திட்ட உதவிகள் மற்றும் நீர்மோர் பந்தல் திறப்பு

தென்காசி, ஜூன்.24-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, தென்காசி வடக்கு மாவட்டம், வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேலக்கரிசல்குளம் பகுதியில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.



கட்சியின் மாண்புமிகு பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச் சருமான புஸ்ஸி ஆனந்த் அவர்களின் ஆசியுடனும், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் மாரியப்பன் அவர்களின் நெறிப்படுத்துதல் மற்றும் அறிவுறுத்தலின்படியும் இந்த நற்பணித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதானம்:

தமிழக முதல்வரின் பிறந்தநாளைக் கொண்டாடும் விதமாக, கோடைக் காலத்தை முன்னிட்டு பொதுமக்களின் தாகத்தைத் தணிக்க நீர்மோர் பந்தல் திறந்து வைக்கப்பட்டது. மேலும், அப்பகுதி பொதுமக்களுக்கு இலவச உணவும், அரசுப் பள்ளி மாணவமா ணவிகளுக்குப் பயனுள்ள பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன. முக்கியப் பொறுப்பாளர்கள் பங்கேற்பு:

இவ்விழா வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் சந்தோஷ் அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றியச் செயற்குழு உறுப்பினர் எம். இராஜா அண்ணாமலை முன்னின்று சிறப்பாகச் செய்திருந்தார்.

இந்நிகழ்வில் வார்டு செயலாளர்கள் மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள், மற்றும் பொதுமக்கள் எனப் பலர் பெருந்திரளாகக் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

# தூய்மைப் பணியாளர்களுக்கு வேட்டி, சேலை... ஆதரவற்றோருக்கு மதிய உணவு! தவெக மாவட்டச் செயலாளர் ராஜகோபால் தலைமையில் மக்கள் சேவை!

திசையன்விளை, ஜூன்.24-

தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவரும், தமிழக முதலமைச்சருமான திரு. ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, திருநெல்வேலி தெற்கு மாவட்டம் திசையன்விளை பேரூர் கழகத்தின் சார்பில் மும்மத நல்லிணக்கப் பிரார்த்தனைகள், தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் ஆதரவற்றோருக்கு அன்னதானம் வழங்கும் மாபெரும் மக்கள் நல விமரிசைக் கொண்டாட்டம் மிக எழுச்சியாக நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் தலைமை ரூ மக்கள் பிரதிநிதிகள் முன்னிலை:

இம்மாபெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்விற்குத் திருநெல்வேலி தெற்கு மாவட்டச் செயலாளர் ராஜகோபால் தலைமை தாங்கி,



நலத்திட்ட உதவிகளைத் தொடங்கி வைத்தார். ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ச. சதீஷ் கிறிஸ்டோபர், தெற்கு மாவட்ட இணைச் செயலாளர் காட்வின் பிரசாத், திசையன்விளை பேரூராட்சி முன்னாள் தலைவர் ஏ.கே. சீனிவாசன் மற்றும் கழக மூத்த நிர்வாகி றி.ஜி.வி. தில்லை முத்துக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்து நிகழ்வைச் சிறப்பித்தனர். இக்கோலாகல விழாவிற்கான ஒட்டுமொத்த விரிவான ஏற்பாடுகளையும் திசையன்விளை பேரூர் கழகச் செயலாளர் கில்லி ராஜா மிக நேர்த்தியாகச் செய்திருந்தார்.

மும்மதத் தலங்களில் வழிபாடு - நேர்ச்சை விநியோகம்:

முதலமைச்சரின் பிறந்தநாளையொட்டி, ஆன்மீக நல்லிணக்கத்தை நிலைநாட்டும் வகையில் உவரி அருள்மிகு சுயம்புலிங்க சுவாமி திருக்கோவிலில் சிறப்புப் பூஜைகளும், அதனைத் தொடர்ந்து உலகப் புகழ்பெற்ற உவரி தூய அந்தோனியார் திருத்தலத்தில் உன்னதப் பிரார்த்தனைகளும் பவ்யமாக நடத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, ஆத்தங்கரை பள்ளிவாசலில் உள்ள தர்காவில் மாண்புமிகு முதலமைச்சரின் பெயரில் சிறப்புத் துஆ ஓதப்பட்டு, பொதுமக்களுக்குப் புனித நேர்ச்சை விநியோகிக்கப்பட்டது.

தூய்மைப் பணியாளர்களுக்கு வேட்டி சேலை - காப்பகத்தில் அன்னதானம்:

இவ்விழாவின் உன்னதப் பகுதியாக, திசையன்விளை பேரூராட்சியில் அரும்பணியாற்றி வரும் தூய்மைப் பணியாளர்களின் சேவையைப் பாராட்டி அவர்களுக்கு ஆடம்பரமாக வேட்டி மற்றும் சேலைகள் நலத்திட்ட உதவிகளாக வழங்கப்பட்டன. மேலும், நாங்குநேரி அரசன் காப்பகத்தில் உள்ள ஆதரவற்ற ஏழை எளிய மக்களுக்கு மதிய உணவு அள்ளி அள்ளி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட இளைஞரணி இணை அமைப்பாளர் கணேஷ், மாவட்ட இளைஞரணி நிர்வாகி சுரேஷ், மாவட்டப் பொதுக்குழு உறுப்பினர் அபிநயா, இணைச் செயலாளர் குமார், துணைச் செயலாளர் கண்ணன், பொருளாளர் ஜெயராமன், இளைஞரணி சுதன், தொழில்நுட்ப அணி அசன் முபாரக், தொண்டரணி மகேஷ் பிரபு, ஒன்றிய நிர்வாகி ஜேம்ஸ், பேரூர் நிர்வாகி நீல கிருஷ்ணன், பிரதீஸ் குமார், கார்மேகம், பாலமுருகன், ஒன்றிய நிர்வாகி லிப்சன் மற்றும் கிளைச் செயலாளர்கள் ராஜ்மோகன், குகன், ஜெயக்குமார், சதீஷ், முத்துராஜா, சிவா, செந்தில்குமார், முத்துக்குமார், வினோத், துரை, சங்கர், அபிஷேக், சரவணன் உள்ளிட்ட நகர, வார்டு, பேரூர் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் நூற்றுக்கணக்கில் பெருந்திரளாகப் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.



## ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் முதலமைச்சர் பிறந்தநாளை உற்சாகமாகக் கொண்டாடிய தொண்டர்கள்

திண்டுக்கல், ஜூன்.24-

தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவரும், தமிழக முதலமைச்சருமான ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட இடையகோட்டை பகுதியில் ஏழை எளிய பொதுமக்களுக்கு அன்னதானம், இனிப்புகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் மக்கள் நல விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஒன்றியச் செயலாளர் தலைமையில் மக்கள் சேவை:

இடையகோட்டை பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற இம்மாபெரும் பிறந்தநாள் உன்னத நிகழ்விற்கு, ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் தினேஷ்குமார் முறைப்படி தலைமை தாங்கி, நலத்திட்ட உதவிகள் மற்றும் அன்னதான நிகழ்வினைத் தொடங்கி வைத்தார். கழக முக்கிய நிர்வாகிகள் கில்லி (ராஜகோபால்), கோபி மற்றும் பிரபு ஆகியோர் முன்னிலை வகித்து நிகழ்வைச் சிறப்பித்தனர்.

500 பேருக்கு அறுசுவை உணவு - இனிப்பு விநியோகம்:

முதலமைச்சரின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற இம்முகாமில், இடையகோட்டை மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங் களைச் சேர்ந்த சாமானிய உழைப் பாளர்கள், பயணிகள் எனச் சுமார் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்குத் தங்கு தடையின்றி தூய்மையான அறுசுவை மதிய உணவு, பிறந்தநாள் இனிப்புகள் மற்றும் அத்தியாவசிய நலத்திட்ட உதவிகள் அள்ளி அள்ளி வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழகத்தின் முக்கிய நிர்வாகிகளான வல்லரசு, கனகராஜ், பொம்முராஜ், தினேஷ், நிதீஷ், மதன், கவியரசு, பாபு, கோபி, தமிழ், கதிரவன் உள்ளிட்ட பல தவெக தம்பிகளும், தொண்டர்களும் பெருந் திரளாகக் கலந்துகொண்டு, பொதுமக் களுக்கு அன்னதானங்களை வழங்கி முதலமைச்சரின் பிறந்தநாளை மிக எழுச்சியாகவும் உற்சாகமாகவும் கொண்டாடினர்.

தென்காசி வட்டாட்சியர் அலுவலகத்தில் பசலி1435 (2025- 2026) வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிறைவு நாளில்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்

தென்காசி, ஜூன்.24-

தென்காசி வட்டாட்சியர் அலுவலகத்தில் (23.06.2026) பசலி1435 (2025-2026) வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிறைவு நாளில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ் ஜீத்சிங் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர் களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில்,

தென்காசி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் 1435 (2025-2026) ஆம் பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) (17.06.2026) அன்று கடையம் குறுவட்டத்தின் கீழ் உள்ள கிராமப் பகுதிகளுக்கும், (18.06.2026) அன்று ஆழ்வார்குறிச்சி குறுவட்டத்திற்குட்பட்ட கிராமப் பகுதிகளுக்கும், (19.06.2026) அன்று கல்லூரணி குறுவட்டத்திற்குட்பட்ட கிராமப்பகுதிகளுக்கும் நடைபெற்றது. இன்றைய



தினம் தென்காசி குறுவட்டத்தின் கீழ் உள்ள புலியூர், தென்காசி, குத்துக்கல்வலசை, இலஞ்சி, குற்றாலம், மேலகரம், பாட்டபத்து, மின்னடிச்சேரி, ஆயிரப்பேரி, மத்தளம்பாறை, சில்லரைப்புரவு ஆகிய கிராமப்பகுதிகளுக்கான 1435 (2025-2026) ஆம் பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெற்றது. இக்கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பட்டா மாறுதல், புதிய குடும்ப அட்டை, வாரிசு சான்று, மகளிர் உரிமைத்தொகை போன்ற பல்வேறு கோரிக்கை சார்ந்த 108 மனுக்களை வழங்கி னார்கள். நான்கு நாட்கள் நடைபெற்ற 1435 (2025 -2026) ஆம் பசலிக்கான வருவாய்த் தீர்வாயத்தில் (ஜமாபந்தி) மொத்தம் 268 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இதில் பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீதும் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு பயனாளிகளின் மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டு அவர்களுக்கான கோரிக் கைகள் நிறைவேற்றப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., தெரிவித்தார்.

பின்னர் 11 பயனா ளிகளுக்கு பட்டா விற்கான ஆணைகளையும், 02 பயனாளிகளுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இயற்கை மரண உதவித் தொகைக்கான ஆணைகளையும், 02 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், 01 பயனாளிக்கு குடும்ப அட்டையில் முகவரி மாற்றமும், 01 பயனாளிக்கு பிறப்புச்சான்றும், 01 பயனாளிக்கு தரிசு நிலச் சான்றுக்கான ஆணையினையும், 01 பயனாளிக்கு முடக்கம் செய்யப்பட்ட ஆதார் எண்ணை விடுவித்தலும் என மொத்தம் 22 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்வில், உதவி ஆணையர் (நில அளவை) ஜாஹீர் உசைன், தென்காசி வட்டாட்சியர் ஹரிஹரன், மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் இராம்குமார் (பொது), தென்காசி தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்) தஅரவிந்த், வட்டாட்சியர்கள் ஓசன்னா பெர்னாண்டோ (நகர நிலவரித்திட்டம்), பட்டமுத்து (நகர நிலவரித் திட்டம்), கண்ணன் (சமூக பாதுகாப்பு திட்டம்), சரவணன் (கோட்ட கலால்), அருணாசலம் (ஆதி திராவிடர் நலம்) மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## "கோவில், தேவாலயம், பள்ளிவாசல் திசையன்விளையில் முதல்வர் விஜய் பிறந்தநாளில் மும்மதப் பிரார்த்தனை!"

திசையன்விளை, ஜூன்.24-

தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவரும், மாண்புமிகு தமிழக முதலமைச்சருமான தளபதி ஜோசப் விஜய் அவர்களின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு, நெல்லை தெற்கு மாவட்டம் திசையன்விளை பேரூர் கழகம் மற்றும் நகரக் கழகத்தின் சார்பில் மும்மதத் தலங்களிலும் சிறப்புப் பிரார்த்தனைகள் மற்றும் பூஜைகள் நடத்தும் மாபெரும் மதநல்லிணக்க வரலாற்று நிகழ்வு நேற்று மிக விமரிசையாக நடைபெற்றது.

மும்மதத் தலங்களில் தளபதி பெயரில் அர்ச்சனை - பிரார்த்தனை:

திசையன்விளை பேரூர் கழகச் செயலாளரும், நகரச் செயலாளருமான கில்லி ராஜா அவர்களின் தலைமையில் இந்நிகழ்ச்சிகள் மிக நேர்த்தியாக ஒருங்கிணைக்கப்பட்டன. இதையொட்டி, இப்பகுதியின் புகழ்பெற்ற ஆன்மீகத் தலங்களான உவரி அருள்மிகு சுயம்புலிங்க சுவாமி திருக்கோவில், பரதர் உவரி புனித அந்தோனியார் ஆலயம் மற்றும் ஆத்தங்கரை பள்ளிவாசல் ஆகிய மும்மத வழிபாட்டுத் தலங்களிலும் மாண்புமிகு முதலமைச்சர் தளபதி விஜய் அவர்களின் பெயரில் சிறப்புப் பூஜைகள், ஆராதனைகள் மற்றும் துவாப் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன. முதலமைச்சரின் நீண்ட ஆயுளுக்காகவும், மக்கள் சேவை சிறக்கவும் வேண்டி தவெக தம்பிகள் ஓரணியாகத் திரண்டு இந்த ஆன்மீக வழிபாடுகளை மேற்கொண்டனர்.

திசையன்விளை நகரச் செயலாளர் கில்லி ராஜா தலைமையேற்று நடத்திய இந்நிகழ்வில், தவெக மாவட்ட இளைஞரணி இணை அமைப்பாளர் கணேஷ், நகர நிர்வாகி நீலகிருஷ்ணன், மாவட்ட நிர்வாகி தில்லை முத்துக்குமார், குகன், திசையன்விளை நகர இளைஞரணி அமைப்பாளர் சுதன், 5வது வார்டு கிளைச் செயலாளர் ஜெயக்குமார், மின்னல் ராஜலிங்கம் உள்ளிட்ட பேரூர், நகர, மாவட்ட, ஒன்றிய கழக முக்கிய பொறுப்பாளர்களும், சார்பு அணி நிர்வாகிகளும் பெருந்திரளாகக் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.



■ தமிழக முதலமைச்சரும் தமிழக வெற்றி கழக தலைவருமான விஜயின் 52-வது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை தலைமைச் செயலகத்தில் அவரை ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.கே. கிறிஸ்டோபர் நேரில் சந்தித்து பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார்.





## தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் 52 வது பிறந்தநாள் விழா: தென்காசி வடக்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நடைபெற்றது

தென்காசி, ஜூன், 24-

தென்காசி வடக்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் 52 வது பிறந்தநாளையொட்டி வடக்கு மாவட்ட செயலாளர் மாரியப்பன் அறிவுறித்தலின்படி புளியங்குடி தெற்கு, வடக்கு நகர கழகம் சார்பில் தெற்கு நகர செயலாளர்கள் எஸ்விஎம் கண்ணன், வடக்கு நகர சிவகண்ணன் தலைமையில் டிஎன் புதுக்குடி பேருந்து நிலையம் புளியங்குடி பேருந்து நிலையம் பூமார்க்கெட் ஆகிய பகுதிகளில் தவெகவினர் பட்டாசுகள் வெடித்து கேக் வெட்டி இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

தொடர்ந்து பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மோளிஸ் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி பள்ளி மற்றும் டிஎஸ்எம் அறக்கட்டளை தொண்டு நிறுவனத்தில் உள்ள முதியோர் மற்றும் ஆதரவற்றோர்களுக்கு மதிய உணவு வங்கினர் மேலும் அரசு மருத்துவமனை உள் நோயாளிகளுக்கு மதிய உணவு வழங்கஇதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சுரேஷ், மாவட்ட துணைச் செயலாளர் மகேஷ், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ஜான்சன்துரை, மாவட்ட இளைஞர் அணி இளைஞரணி இணை அமைப்பாளர் செளந்திரபாண்டியன், நகர செயற்குழு உறுப்பினர் கிறிஸ்டோபர்ராஜா, மாவட்ட வழக்கறிஞர் அணி இணை அமைப்பாளர் இராஜேந்திர பூபதி,வர்கீஸ் மொபைல் ஆல்பர்ட், நகர செயற்குழு உறுப்பினர் மாஸ்டர் முருகப்பெருமாள், மாவட்ட நிர்வாகிகள் நகரகிளை, வார்டு நிரவாகிகள் தொண்டர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ சேலம் மாவட்டம் அஸ்தம்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில், செவ்வாய்க்கிழமை ஜமாபந்தி நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சேலம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குட்பட்ட 35 வருவாய் கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் தங்களுடைய கோரிக்கைகள் குறித்த மனுக்களை ஜமாபந்தி நிகழ்ச்சியில் அரசு அலுவலர்களிடம் வழங்கி உடனடி தீர்வு பெற்றனர். இந்த நிகழ்ச்சியில் ஜமாபந்தி அலுவலர் வட்டாட்சியர் சிவராஜ் வட்டாட்சியர் சிவராஜ் தலைமையில் துறை ரீதியான அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்கள் மீது உடனடி விசாரணை செய்து தீர்வு வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் சேலம் அஸ்தம்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்குட்பட்ட 35 வருவாய் கிராமங்களுக்குட்பட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## "இயற்கைக்கும், மனிதனுக்கும் எமனாகும் கோனோகார்பஸ் மரம்!" தடை விதிக்க MPSS ஆட்சியரிடம் அதிரடி மனு!

திருப்பூர், ஜூன்.24-

தமிழ்நாட்டின் இயற்கை வளம், நிலத்தடி நீர் மற்றும் மனித ஆரோக்கியத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கி, அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டுள்ள 'கோனோகார்பஸ்' (Conocarpus) மரங்களை ஒட்டுமொத்தமாக வேரோடு பிடுங்கி எறிய வலியுறுத்தி, 'மக்கள் பொதுமனித சமூக சேவை அறக்கட்டளை' (MPSS) சார்பாகத் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முக்கியக் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

கோனோகார்பஸ் மரங்களால் ஏற்படும் அசாத்தியப் பாதிப்புகள்:

ஆட்சியரிடம் அளிக்க ப்பட்ட அந்த மனுவில், கோனோகார்பஸ் மரங்களை வளர்க்கவோ அல்லது விற்கவோ தடை விதிக்கப்பட்டுள்ள சூழலிலும், தமிழ்நாட்டின் பல்வேறு பொது இடங்களில் இவை இன்னும் பரவலாகக் காணப்படுவது குறித்துக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மரங்களால் ஏற்படும் முதன்மையான பாதிப்புகள் வருமாறு:

நிலத்தடி நீர் உறிஞ்சல்: இம்மரத்தின் வேர்கள் நிலத்தடி நீரை மிக அதீத அளவில் உறிஞ்சி, நீர்மட்டத்தை அடியோடு வறளச் செய்கின்றன.

உள்கட்டமைப்புச் சேதம்: இதன் அசுர வேர்கள் அருகில் உள்ள கட்டிடங்களின் அஸ்திவாரம், குடிநீர் குழாய்கள் மற்றும் சாக்கடைக் கால்வா ய்களைப் புகுந்து சேதப்படுத்துகின்றன.

இயற்கை வளம் அழிப்பு: மண்ணின் இயற்கை வளத்தையும், மண் தரத்தையும் முற்றிலும் சீர்குலைக்கின்றன.





மனித குலத்தை அச்சுறுத்தும் கொடிய நோய்கள்:

மேலும், இம்மரத்தின் மகரந்தத் துகள்கள் மற்றும் தன்மை களால் மனிதர் களுக்கு ஏற்படும் உடல் நலக் குறைபாடுகள் குறித்து அந்த மனுவில் தீர்க்கமாக எச்சரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக:

ஆஸ்துமா, தீராத உலர் இருமல், ஒவ்வாமை (Allergy),

நுரையீரல் பாதிப்புகள், கடுமையான மூச்சுத் திணறல் மற்றும் காய்ச்சல்

உள்ளிட்ட ஆபத்தான நோய்களை இம்மரங்கள் ஏற்படுத்துகின்றன. எனவே, திருப்பூர் மாவட்டப் பகுதிகளில் உள்ள கோனோகார்பஸ் மரங்களை அடையாளம் கண்டு, அவற்றை உடனடியாகப் போர்க்கால அடிப்படையில் வேரோடு பிடுங்கி அகற்ற மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

நிறுவனத் தலைவரின் நெஞ்சார்ந்த நன்றி:

இம்மாபெரும் சமூகப் பொறுப்புணர்வு மிக்க மனு அளிக்கும் விழிப்புணர்வு நிகழ்வில், அறக்கட் டளையின் தலைமைத் தலைவர்கள், மாவட்டத் தலைவர்கள், மாநிலத் தலைவர்கள், மகளிர் அணி தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டு தங்களின் தார்மீகக் குரலை எழுப்பினர். இந்நிகழ்ச்சியை முன்னின்று நடத்திய 'மக்கள் பொதுமனித சமூக சேவை அறக்கட்டளை' (MPSS) நிறுவனத் தலைவர் ஜே. வினோத் குமார் களத்தில் இறங்கி உழைத்த அனைத்துத் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.





SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000